அனுப்புநர்
திரு.பெ.க.வேணுசேகரன், பி.எஸ்.சி.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1.முதன்மை கல்வி அலுவலர்,வேலூர்.
2.மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர்/திருப்பத்தூர்/வாணியம்பாடி/
இராணிப்பேட்டை/அரக்கோணம்.

ந.க.கே6/25066/2019, நாள் : .02.2020

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் நலம் - வேலூர் மாவட்டம் - 2019-20ஆம் கல்வியாண்டு - ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் - அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/மேனிலைப்பள்ளிகளில் கடந்த ஆண்டு 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயின்று இணைய வழியில் விண்ணப்பித்திருந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் புதுப்பித்தல் செய்யப்பட்ட(Renewed) விண்ணப்பங்களை 05.02.2020-க்குள் இணைய வழியில் சமர்ப்பிக்க(Submit) கோரியது -நினைவூட்டல்-தொடர்பாக.

பார்வை : 1.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5 அவர்களின் மின்னஞ்சல் செய்தி, நாள்:27.01.2020
2.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5 அவர்களின் மின்னஞ்சல் செய்தி, நாள்:08.02.2020

*****

பார்வையில் 1-இல் காணும் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் மின்னஞ்சல் செய்தியில் இணைய வழியில் பெறப்பட்டு வரும் போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் விண்ணப்பங்களை விரைந்து இணைய வழியில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையில் 2-இல் காணும் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் மின்னஞ்சல் செய்தியில் புதுப்பித்தல் விண்ணப்பங்களை இணைய வழியில் சமர்ப்பிக்காமல் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை போஸ்ட் மெட்ரிக்-1112 மற்றும் ப்ரீ மெட்ரிக்-1307 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/மேனிலைப்பள்ளிகளில் 2019-20ஆம் கல்வியாண்டில் ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் கடந்த ஆண்டில் 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயின்று இணைய வழியில் விண்ணப்பித்திருந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் புதுப்பித்தல் செய்யப்பட்ட(Renewed) விண்ணப்பங்களை 14.02.2020-க்குள் இணைய வழியில் சமர்ப்பிக்குமாறு (Submit) அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: மேற்படி (Process steps)

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

நகல்: 1.மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்/ இராணிப்பேட்டை/ திருப்பத்தூர்.
2.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5
} தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned by CamScanner